தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1979 ஏப்ரல் 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்பு மிகு பேரவைக் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) பாகிஸ்தான் முன்னாள் அதிபர் தூக்கிலிடப் பெற்றது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், ஒரு முக்கியமான விஷயம். இந்தியாவினுடைய நட்பு நாடான பாகிஸ்தானுடைய முன்னாள் அதிபர் தூக்கிலே போடப் பட்டது சம்பந்தமாக கேரளா, மகாராட்டிரம் போன்ற மாநிலங் களில் அஞ்சலித் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். நம் முடைய சபையிலேயும் அஞ்சலித் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாராளுமன்றத் திலே அப்படிப்பட்ட தீர்மானம் கொண்டுவரப்பட்டதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பாராளுமன்றத் திலே அத்தகைய இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றவில்லை. நம்முடைய சட்டமன்றத்திற்கு என்று தனி மரபுகள் உண்டு. மற்ற மாநிலங்களிலே என்ன என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்த்துச் செய்வது நம்முடைய மரபு இல்லை. நம்முடைய நிலைமை இரங்கல் தீர்மானம் தேவையில்லை என்பதாகும்.

திரு. மு. அம்பிகாபதி : மத்தியிலே ஜனதா கட்சியினுடைய ஆட்சி இருக்கிறது. தமிழகத்திலே அகில இந்திய அண்ணா தி.மு.க. வினுடைய ஆட்சி இருக்கிறது. கேரளாவிலே கம்யூ னிஸ்ட் கட்சியும் காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து இருக்கிற ஆட்சி இருக்கிறது. . . .

[1979 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேரளாவிலே முஸ்லீம் லீக்கும் உண்டு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது இயற்கை மரணம் அல்ல. வெளிநாட்டுப் பிரச்சினைகளிலே வேறு நாட்டின் உள் விவகாரங்களிலே தலையிடுவதில்லை என்ற மரபை நாம் கடைப் பிடித்துக் கொண்டு இருக்கிறோம். பாராளு மன்றத்திலே அதன் காரணமாகத் தீர்மானம் கொண்டு வரப்பட வில்லை. கேரளா போன்ற சில மாநிலங்களிலே அப்படி இருந் தாலுங்கூட அதைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : ஒரு கருத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். முன்வரிசையிலே இருக்கிறவர்களுக்கு தாங்கள் அனுமதி கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேண்டாம்; உட்காருங்கள், தேவையில்லை என்று முடிவு செய்ததற்குப் பிறகு ஒவ்வொருவரும் அந்தந்தக் கட்சியின் சார்பாகப் பேச வேண்டும் என்பதெல்லாம் நல்ல மரபாக இருக்காது, அமருங் கள்.

திரு. கு. ரமணி : கட்சிக்கு ஒரு ஆள் பங்கு போட்டுப் பேசுவது என்பதல்ல. அமைச்சர் அவர்கள் சொன்னபோது பாராளுமன்றத்திலே செய்யவில்லை, நாமே எதற்காகச் செய் வது என்று சொன்னது சரியல்ல. இந்திய அரசியல் சட்டப்படி இது சுதந்திரமாக இயங்கக் கூடிய சட்டமன்றம். அரசியல் சட்டத்தை மீறாமல் நாம் அப்படிச் செய்வதற்கு உரிமை இருக் கிறது. ஏன் இங்கே செய்யக் கூடாது என்பதற்குத் தகுந்த பதில் அமைச்சர் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெளி நாட்டி னுடைய உள் விவகாரங்களில் தலையிடக் கூடாது என்ற முறை யிலே பாராளுமன்றத்திலே கொண்டு வரப்படவில்லை. அதைத் தான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

திரு. அ. சுவாமிதாஸ் : சார். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். குறுகிய கால வினா 43.